# ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதிக்குமாறு கோரிக்கை முன்வைத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்

## இருவர் கைது - ஏனையோர் தொடர்ந்தும் முன்னெடுப்பு



வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மீது பொலிஸார் பலப்பிரயோகத்தை முன்னெடுத்தமையினால் இன்று அங்கு பதற்றமானதொரு சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து, காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றையதினம் வவுனியாவிற்கு விஜயம் செய்திருந்திருந்த நிலையில், வவுனியா நகர சபை மண்டபத்தில் வன்னி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

இதனையடுத்து வடகிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்ல முற்பட்டனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிசார் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்கமுடியாது என்றும் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கமுடியும் என்றும் தெரிவித்தனர்.

இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (04)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 15 வெள்ளிக்கிழமை 05.01.2024 கதிர் 152



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## ஒழிக்கப்பட்ட தட்டம்மை நோய் நாட்டில் மீண்டும்! நாளை சிறப்பு தடுப்பூசி திட்டம் நடைபெறுகிறது

நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்ட தட்டம்மை நோய் தற்போது மீண்டும் 10 மாவட்டங்களில் பரவியுள்ளதால், ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு உடனடியாக கூடுதல் தட்டம்மை தடுப்பூசியை (எம்எம்ஆர்) வழங்குமாறு தொற்றுநோயியல் நிபுணர் சமித்த கினிகே பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

இதுவரை 740 தட்டம்மை நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், 2019 ஆம் ஆண்டின்போது நாடு முழுவதும் தட்டம்மை ஒழிக்கப்பட்ட போதிலும், சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடாததால் இந்த நோய் மீண்டும் பரவியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, நாளை 6 ஆம் திகதி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, கல்முனை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியவாறு தட்டம்மை தடுப்பூசி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும், பெற்றோர் தமது குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை போடுமாறும் மருத்துவ நிபுணர் கினிகே மேலும் தெரிவித்துள்ளார்.

'இது பாராமிக்ஸோவைரஸ் 2➤

## டெங்கு நோயை ஒழிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் அமுல்! 7ஆம் திகதி வீடுகள், அரச நிறுவனங்களில் சோதனை நடைபெறும்

டெங்கு நோயை ஒழிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை எதிர்வரும் 7ஆம் திகதி முன்னெடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கள் நிறுவப்பட்டு அதன் கீழ் இந்த வேலைத்-திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கில் கடந்த 3ஆம் திகதி சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 07ஆம் திகதி முதல் டெங்கு ஒழிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்காக வீடுகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட வளாகங்களை சோதனையிட அரச அதிகாரிகள் வரவுள்ளதாகவும், அவர்களுக்கு பொதுமக்களின் அதிக பட்ச ஆதரவை வழங்குமாறும் சுகாதார அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், டெங்கு அபாயம் உள்ள பகுதிகளில் கவனம் செலுத்தி நாடளாவிய ரீதியில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டம் 2➤

## கார்கள் இறக்குமதி விரைவில் ஆரம்பம்!

இலங்கைக்கு மீண்டும் கார்களை இறக்குமதி செய்வதற்கு தயாராகி வருவதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 1000 சி.சி. இற்கும் குறைவான இன்ஜின் திறனைக் கொண்ட கார்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டொலர் இருப்பை பேணுவதற்காகவே குறைந்தபட்ச 2➤

## யாழில் கைதான நான்கு பேரும் பொலிஸ் பிணையில் விடுவிப்பு

ஜனாதிபதிக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்டம் செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அத்துமீறி நுழைய முற்பட்டமை தொடர்பில் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நால்வரும் விடுவிக்கப்பட்டனர்.

நால்வரிடம் பொலிஸார் வாக்கு மூலத்தைப் பெற்றுவிட்டு பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்ட நிலையில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் பஸ்ஸில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (அ)

## வரி எண் பெறாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமா?

### அமைச்சர் விளக்கமளிப்பு



வரி எண் எடுக்காதவர்களுக்கு ரூ. 50,000 அபராதம் விதிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இருந்தாலும் அந்த சட்டம் தற்போதைக்கு அமுல்படுத்தப்பட மாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் 2024 ஜனவரி 01 முதல் வரி எண்ணைப் பெறுவதை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது. நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து, அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், நாட்டு மக்களை ஒடுக்குவதற்கு எதிர்பார்க்கவில்லை எனவும் அமைச்சர் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

வரிக் கோப்பினைத் திறந்து இலக்கத்தைப் பெறுவது கட்டாயமானாலும், அவ்வாறு வரி இலக்கம் பெறும் அனைவரும் வரி செலுத்த வேண்டும் 2➤

## கிளிநொச்சிக்கு செல்லும் ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம் 10 பேருக்கு எதிராகத் தடை உத்தரவைப் பெற்றனர் பொலிசார்

ஜனாதிபதி விஜயத்தின்போது போராட்டங்களை முன்னெடுக்காத வகையில், 10 பேருக்கு எதிராக பொலிசாரால் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்திற்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

பூநகரி கோட்டை, கஜு உற்பத்தி நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் பிரதேச செயலகத்தில் சந்திப்பொன்றிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த நிகழ்வில் கலந்துகொள்ளும் ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகக் குறிப்பிட்டு, பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் 10 பேருக்கு எதிராக தடையுத்தரவு பெறும் வகையில் மன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலை மற்றும் மதுபான விற்பனை நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக 2➤

# யாழில் கடற்றொழிலுக்குச் சென்ற 5 பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மயங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய அமலசூரி அன்ரனியூட் என்ற 5 பெண் பிள்ளைகளின் தந்தையே சாவடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், மேற்படி நபர் உட்பட மூவர் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் கடற்றொழிலுக்குச் சென்றனர்.

இதன்போது அமலசூரி அன்ரனியூட் திடீரென மயக்கமடைந்துள்ளார். அவருடன் சென்றவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சேர்த்தனர்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கிணற்றில் தவறி வீழ்ந்து 96 வயது மூதாட்டி மரணம்

### யாழில் சோகம்

யாழ்ப்பாணத்தில் 96 வயதான மூதாட்டி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று (04) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி மூதாட்டி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு முயன்ற வேளை கால் தவறி கிணற்றினுள் வீழ்ந்து சாவடைந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மியான்மரில் 9,652 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது

மியான்மர் சுதந்திர தினத்தையொட்டி, அந்த நாட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 9,652 கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 9,652 சிறைக் கைதிகளுக்கு ராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லியாங் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். அத்துடன், சிறையில் அடைக்கப்பட்டுள்ள 114 வெளிநாட்டினரையும் விடுதலை செய்ய அவர் உத்தரவிட்டுள்ளார் என்று அந்த நாட்டின் அரசாங்கத் தொலைக்காட்சி ஊடகம் தகவல் தெரிவித்தது.

எனினும், ராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடி, அதற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டவர்களில் அடங்குவார்களா என்பதை அந்தத் தொலைக்காட்சி ஊடகம் தெளிவுபடுத்தவில்லை. (04)

## காட்டு யானை தாக்கி 28 வயது இளைஞர் பலி

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம், வெலிக்கந்தை பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி இளைஞர், காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்த வேளை யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

28 வயதுடைய வசந்த பண்டார என்ற நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### வரி எண் பெறாதவர்களுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதில்லை என்றும், தற்போது மாதாந்தம் 100,000 ரூபாய்க்கு மேல் நிகர வருமானம் உள்ளவர்கள் மாத்திரமே வருமான வரி செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ரெத-17)

### கிளிநொச்சிக்கு செல்லும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தே குறித்த தடை உத்தரவைக் கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி, சட்ட ரீதியாக மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையைத் தடுக்க முடியாது எனக் குறிப்பிட்டு, நிகழ்வு இடம்பெறும் பகுதியில் மட்டும் போராட்டங்களை தடுக்கும் வகையில் தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நிகழ்வு இடம் பெறும் பகுதியில் போராட்டத்தை மேற்கொண்டால் கைது செய்யும் வகையிலும், உயர்தரப் பரீட்சை மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையிலும், ஒலிபெருக்கி பயன்பாடு மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளிற்கு இடமளிக்காத வகையிலும் குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(02)

## கிளிநொச்சிப் பிரதேசத்தில் கால்நடைத் திருட்டு அதிகரிப்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை, பெரியகுளம் பகுதி மற்றும் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் ஆகிய பகுதிகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் காரணமாக கால்நடைகளை வளர்ப்பாளர்கள் தமது இருப்பிடங்களில் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் காரணத்தினால் வீதி ஓரங்களில் கட்டிவிடப்பட்ட கால்நடைகளை, இரவு வேளைகளில் கப்ரக வாகனத்தில் வரும் இனந்தெரியாத நபர்கள் தங்களது வாகனங்களில் ஏற்றிச் செல்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதுவரையில் பெறுமதி மிக்க 15 கால்நடைகள் அண்மைய நாட்களில் களவாடப்பட்டுள்ளதாகவும், வளர்த்து, அவற்றில் பெறப்படுகின்ற பாலினை விற்பனைசெய்து வாழ்வாதாரத்தினை மேற்கொண்டு வந்ததாகவும் அதற்கும் வழியற்றுப்போயுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக தாம் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (02)

### கார்கள் இறக்குமதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயந்திரத் திறன் கொண்ட கார்களை மட்டும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 1000 சி.சி. இற்கும் குறைவான இன்ஜின் திறன் கொண்ட கார்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் இதற்கான நடவடிக்கைகள் ஒரு மாதத்திற்குள் எடுக்கப்படும் என்றும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (04)

### டெங்கு நோயை ஒழிப்பதற்கான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சுகாதார மற்றும் வைத்திய அதிகாரி அலுவலகங்களை கேந்திரமாக கொண்டு நடாத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெத-19)

### ஒழிக்கப்பட்ட தட்டம்மை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவைச் சேர்ந்த ஒரு தொற்று நோயாகும், மேலும் இது ஆபத்தானது என நம்பப்படுகிறது. கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் இதுவரை ஏழு குழந்தைகளுக்கு தட்டம்மை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான சந்தேகத்திற்கிடமான நோய்களுடன் பதினைந்து சிறுவர்கள் உள்ளனர்' என மேற்படி மருத்துவமனையின் சிறுவர் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதிக காய்ச்சல், இருமல், சளி, மூக்கில் நீர் வடிதல், கண் சிவத்தல் போன்றவை இந்நோய்க்கான முக்கிய அறிகுறிகளாகும். ஒரு பாதிக்கப்பட்ட நபர் பதினெட்டு ஆரோக்கியமான நபர்களுக்கு வைரஸை பரப்ப முடியும் என்பதால் இதற்கு தடுப்பூசிகள் போடுதல் அவசியம் என்று மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர். அம்மை நோய்க்குப் பிறகு, குறிப்பாக சிறு குழந்தைகளில் நிமோனியா பாக்டீரியா நிமோனியாவாக அது உருவாகலாம். வயிற்றுப்போக்கு, நீரிழப்பு மற்றும் வலிப்பு போன்றவற்றால் மூளையும் பாதிக்கப்படலாம், இது மரணத்தை கூட ஏற்படுத்தலாம் எனவும் மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெத-18)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# “ஒபரேஷன் ப்ராஸ்பெரிட்டி கார்டியன்” க்கு ஆதரவளித்தால் இலங்கை பல சவால்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும்

## ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் விளக்கம்



(நூருல் ஹுதா உமர்)

”ஒபரேஷன் ப்ராஸ்பெரிட்டி கார்டியன்” என்ற பெயரில் இஸ்ரேலுடன் சேர்ந்த இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் கூட்டமைப்பை ஆதரித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செங்கடலைப் பாதுகாப்பதற்காக இலங்கை கடற்படையை அனுப்ப எடுத்திருக்கும் முடிவு, பலஸ்தீன் தொடர்பில் ஜனாதிபதி கொண்டிருக்கும் நிலைப்பாடு மற்றும் சித்தாந்தத்துடன் முரண்படுவதாக முற்போக்காக சிந்திக்கும் அரசியல்வாதி என்ற வகையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், என கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

செங்கடல் பாதுகாப்பு தொடர்பில் கடற்படையினரை நிலைநிறுத்த ஜனாதிபதி தீர்மானிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கூட்டினால் இது தொடர்பில் ஆளும் தரப்பினதும் மற்றும் எதிர்க்கட்சிகளினதும் கருத்துக்களை கேட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கடற்படையை நிலைநிறுத்த தீர்மானித்தால், பாலஸ்தீன விடுதலைப் போரில் இரட்டை வேடம் போடும் அரசியல் சக்திகளின் இரட்டை முகம் வெளிப்பட்டு அவர்களை இந்நாட்டின் முற்போக்கு சிந்தனை கொண்ட மக்கள் அறிந்து கொள்வர்.

மேலும், செங்கடலுக்கு கடற்படையை அனுப்புவதன் மூலம், பல தேவையற்ற பூகோள அரசியல் பிரச்சினைகளை இலங்கை தேசம் சந்திக்க நேரிடலாம். அது மட்டுமில்லாது பாலஸ்தீனுக்கு தீங்கு விளைவிக்க முயற்சிக்கும் கண்ணுக்கு தெரியாத பலமான கரங்கள் மற்றும் அந்நிய சக்திகளின் அச்சுறுத்தல்களை நம் தாய்நாடு எதிர்கொள்ள நேரிடும்.

நாம் அதை பலமாக எதிர்கொள்ள முடியுமா? என்பது போன்ற விடயங்களை நாம் புத்திசாலித்தனமாக சிந்திக்க வேண்டியுள்ளது. இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாத சூழலில், மத்திய கிழக்கில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிவதை அறியாமல், இதுபோன்ற முடிவுகளை எடுப்பதன் மூலம், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மீதான சவால்கள் மற்றும் லட்சியங்கள் நிறைவேறாமல் போகலாம். நமக்கும் முஸ்லிம் நாடுகளுக்குமிடையிலான நட்புறவும் சேதமடையலாம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலக புவிசார் அரசியலில் முதிர்ச்சியடைந்த அனுபவத்தை கொண்டுள்ள ஜனாதிபதி அவர்கள், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கவனம் செலுத்தி, 75 வருடகாலமாக நீடித்துவரும் இலங்கையின் இன மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையைத் தீர்த்து, பலமான அரசின் கனவை உருவாக்க வேண்டும் என்றும் தெற்காசியாவின் சிறந்த நாடாக இலங்கை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்க யூத சக்திகளின் சம்மேளனமாக ”ஒபரேஷன் ப்ராஸ்பெரிட்டி கார்டியன்” என்ற பெயரில் இஸ்ரேலுடன் சேர்ந்த இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் கோரமுகத்தை எதிர்த்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் வழியைத் தடுத்து பாலஸ்தீன மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றும் மனிதாபிமானத்தை எதிர்க்காமல் மௌனமாக இருப்பது எமக்கு ஆரோக்கியமானது.

பாலஸ்தீன மக்களின் 75 ஆண்டுகால சுதந்திரப் போராட்டத்திற்கு பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கத்தில் ஹவுதி கிளர்ச்சியாளர்களினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டங்களில் சில மத்திய கிழக்கு நாடுகள் கூட தலையிடுவதில்லை. மௌனமாக இருக்கிறார்கள். அதுவே இன்றைய பூகோள அரசியலில் தேவையான ஒன்றாகும்.

இந்த கொள்கையை கடைபிடிப்பது இலங்கைக்கு நன்மை பயக்கும் என்பதே முற்போக்கு சிந்தனை கொண்ட இலங்கை மக்களின் எண்ணமும் கூட என்பதை ஜனாதிபதிக்கு முன்வைக்க விரும்புகிறேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா





(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு , சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திரு. சி.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையும் சமூகமும் இணைந்து நடாத்திய இவ்விழாவில் பிரதம அதிதியாக வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாளேந்திரன் அவர்களும், கௌரவ அதிதிகளாக வலயக் கல்வி பணிப்பாளர்களான திரு.தி.ரவி, திரு. த.அனந்தரூபன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சமய குருமார்கள் , கல்வி அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் , பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தனர்.

10 வருடங்களுக்கு பிறகு நடைபெறும் இப்பரிசளிப்பு விழாவில் சகல துறைகளிலும் பிரகாசித்த 220 ற்கும் அதிகமான மாணவர்களும் ஆசிரியர்களும் கௌரவித்து பாராட்டப்பட்டதுடன்

பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் 8 பேர், சாதாரண பரீட்சையில் அதிகமான உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் வெட்டுபுள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், விளையாட்டு ,அழகியல் உள்ளிட்ட பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் இதற்காக தங்களை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர்களும் கௌரவப்படுத்தப்பட்டனர்.



# ஹிஸ்புல்லா படையைச் சேர்ந்த நால்வர் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மரணம்



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஹமாஸ் துணைத் தலைவர் சலே அல்-அரூரி குறிவைத்துக் கொல்லப்பட்ட மறுநாளே, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அந்த நாட்டின் சக்திவாய்ந்த ஹிஸ்புல்லா ஆயுதப் படையைச் சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, இஸ்ரேலுக்கும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையிலான போர்ப் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இது குறித்து ஹிஸ்புல்லா வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலில்,

இஸ்ரேல் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த 4 வீரர்கள் உயிரிழந்தனர். அவர்களில், உள்ளூர் படைத் தலைவர் ஒருவரும் அடங்குவார். இஸ்ரேல் எல்லையையொட்டிய நகூரா நகரில் இந்தத் தாக்குதல் புதன்கிழமை நள்ளிரவில் நடத்தப்பட்டது.

ஏற்கெனவே, தெற்கு லெபனானில் இஸ்ரேல் ராணுவம் புதன்கிழமை நடத்திய குண்டுவீச்சில் 5 ஹிஸ்புல்லா வீரர்கள் உயிரிழந்துள்ளனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நகூராவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில் ஒரு வீடு தரைமட்டமானதாகவும், அருகிலுள்ள வீடுகள் சேதமடைந்ததாகவும் அந்தச் செய்தி நிறுவனம் கூறியது.

ஏற்கெனவே, பெய்ரூட்டில் ஹமாஸ் அமைப்பின் 2ஆம் நிலைத் தலைவர் சலே அல்-அரூரியைக் குறிவைத்து செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அவரும், அவரது 5 பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர்.

ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட இந்தக் கொலைக்கு இஸ்ரேல் இதுவரை வெளிப்படையாகப் பொறுப்பேற்கவில்லை. எனினும், இந்தத் தாக்குதலை இஸ்ரேல்தான் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பும், லெபனானும் குற்றஞ்சாட்டியுள்ளன.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் கடந்த அக்டோபரில் இருந்து நடைபெற்று வரும் போரில் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஹமாஸுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். இதனால், ஹிஸ்புல்லாக்களுக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே சிறிய அளவிலான மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும், அது முழு போராக உருவெடுக்கவில்லை.

ஆனால், லெபனானுக்குள் நுழைந்து ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவரை இஸ்ரேல் ராணுவம் கொன்றுள்ளது காஸாவில் நடைபெற்று வரும் போர் லெபனானுக்கும், அதன் தொடர்ச்சியாக மற்ற பிராந்திய நாடுகளுக்கும் பரவுவதற்கான பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சூழலில், லெபனானுக்குள் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் உள்ளூர் தளபதி உள்பட 4 ஹிஸ்புல்லா படையினர் கொல்லப்பட்டிப்பது இந்தப் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (04)

# ஈரானில் இரட்டைக் குண்டு வெடிப்புக்கு அமெரிக்கா, இஸ்ரேல் மீது குற்றச்சாட்டு

**ஐஎஸ் பொறுப்பேற்றதாகவும் தகவல்**



தங்கள் நாட்டின் துணை ராணுவப் படை தளபதிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் நிகழ்த்தப்பட்ட இரட்டை குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு அமெரிக்காவும், இஸ்ரேலும்தான் காரணம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து ஈரான் அதிபர் இப்ராஹிம் ரய்சி கூறியபோது, கெர்மானில் புதன்கிழமை நடத்தப்பட்ட இரட்டை குண்டுவெடிப்பு ஒரு பயங்கரவாதத் தாக்குதலாகும். இந்தத் தாக்குதலை நடத்திய யூத ஆக்கிரமிப்புவாத நாடு (இஸ்ரேல்) அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்தத் தாக்குதலுக்காக அந்த நாட்டுக்கு அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடுமையானதாக இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்பில் அமெரிக்காவுக்கும் தொடர்புள்ளதாக ஈரானின் துணை அதிபர் முகமது ஜம்ஷீதி நேற்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஈரான் துணை ராணுவத்தின் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவு தளபதியாக இருந்தவர் காசிம் சுலைமானி. அந்த நாட்டில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய அவர் இராக் சென்றிருந்தபோது, அவரைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா கடந்த 2020 ஜனவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதில் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், காசிம் சுலைமானியின் நான்காவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கொ□மானில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

அப்போது சுமார் 15 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன. பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த வெடிகுண்டுகள் தொலைவிலிருந்தபடி வெடிக்கச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 103 பேர் உயிரிழந்ததாகவும், 211 பேர் காயமடைந்ததாகவும் சர்வதேச செம்பிறைச் சங்கம் முதலில் தெரிவித்தது. எனினும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வியாழக்கிழமை 84 ஆகக் குறைக்கப்பட்டது.

இறந்தவர்களின் பெயர்கள் ஒரு முறைக்கு மேல் பட்டியலில் குறிப்பிடப்பட்டதால் இந்தக் குழப்பம் ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாகவும், முதல் குண்டுவெடிப்புக்குப் பிறகு அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அவர்கள் அங்கு குழுமியதாகவும் கூறப்படுகிறது.

இந்த குண்டுவெடிப்புக்கும், தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறிய அமெரிக்கா, இதனை இஸ்ரேல் நடத்தியிருப்பதற்கான முகாந்திரமும் இல்லை என்றும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், ஈரான் நாட்டில் புதன்கிழமை நடத்தப்பட்ட இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு ஐஎஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக சில சர்வதுச செய்தி நிறுவனங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. (04)

# நீதிபதியைத் தாக்கிய குற்றவாளி அமெரிக்க நீதிமன்றில் பரபரப்பு

தனக்கு சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதியை, அவரது மேசை மீது பாய்ந்து குற்றவாளி ஒருவர் தாக்கிய சம்பவம், அமெரிக்காவின் லாஸ் வேகாஸின் மாகாண நீதிமன்றத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நீதிமன்ற வளாகத்தில் உள்ள கமராவில் பதிவான இந்தத் தாக்குதல் காட்சிகள் வெளியாகியுள்ளன.

தாக்குதலுக்கு உள்ளான க்ளார்க் கவுன்ட்ரி மாகாண நீதிபதி மேரி கே.ஹோல்தஸ் தனது இருக்கையில் இருந்து பின்னால் சுவரில் விழுந்ததில் சிறு காயம் அடைந்தாரெனினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு காயங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், நீதிபதியின் உதவிக்கு வந்த காவலாளிக்கும் காயம் ஏற்பட்டது. அவர் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்தக் குற்றவாளி, நீதிபதியின் மேசையின் பின்னால் சிறை அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களுடன் சண்டையிடுவதும் வீடியோவில் பதிவாகியிருந்தது.

லாஸ் வேகாஸில் உள்ள மாகாண நீதிமன்றத்தில், அமெரிக்க நேரப்படி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு காரணமான குற்றவாளி 30 வயதான டேபோரா டெலோன் ரெட்டன் என்பவராவார்.

முன்னதாக, நீதிமன்றத்துக்கு வந்து தனது வழக்கறிஞர் அல்மாஸுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ரெட்டன், தன்னைப் பற்றி நீதிபதி கேட்டபோது, "நல்லதை செய்வதற்காக எதையும் செய்யத் தயங்காத நபர். நான் கலகக்காரன் இல்லை. நான் சிறைக்குச் செல்ல வேண்டியவன் இல்லை என்று நினைக்கிறேன். ஆனால், நீங்கள் அதுதான் சரியென்று நினைத்தால் நீங்கள் விரும்பிதைச் செய்யலாம்", என்றார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி, ரெட்டனை சிறையில் அடைக்க உத்தரவிடுகிறேன் என்றுக் கூறியதும், குற்றவாளியின் கையில் நீதிமன்ற காவலாளி கைவிலங்கிட நகர்ந்தார். அப்போது ரெட்டன் உடனடியாக நீதிபதியின் மேசை மீது பாய்ந்து தாக்குதலில் ஈடுபட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து ரெட்டனின் வழக்கறிஞர் அல்மாஸ் எந்த தகவலையும் வழங்கவில்லை.

இந்த நிலையில் நீதிமன்ற செய்தித் தொடர்பாளர் மேரி ஆன் பிரைஸ் கூறுகையில், "அனைத்து நடைமுறைகளையும் நாங்கள் ஆய்வு செய்து வருகிறேன். எங்கள் நீதிபதிகள், பொதுமக்கள் மற்றும் ஊழியர்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (04)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடர்க்கால உதவி வழுங்க நடவடிக்கை



(எம்.எம்.றம்ஸீன்)

பொலன்நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள பராக்கிரம சமுத்திரம், மன்னம்பிட்டி குளம் முதலியனவற்றின் வான்கதவுகள் திறக்கபட்டதன் விளைவாக மகாவலி கங்கையின் கிளை ஆறான வெருகல் ஆற்றில் நீர்மட்டம் மட்டம் உயர்ந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்துள்ளது.

இதன் விளைவாக வட்டவன், மாவடிச்சேனை, சேனையூர், ஆணைத்தீவு முதலிய ஊர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் வட்டவன் ஸ்ரீ தான்தோன றீஸ்வரர் வித்தியாலயத்தில் 106 குடும்பத்தைச் சேர்ந்த 295 பேரும், மாவடிச்சேனை வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் 140 குடும்பத்தைச் சேர்ந்த 429 பேரும் பாதுகாப்பாகத் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

இவர்களைத் திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் மற்றும் செயலாளர் திரு.கணபதிப் பிள்ளை சிவானந்தன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

தற்பொழுது இந்த மக்களுக்கு அரசாங்கத்தின் பேரிடர் முகாமைத்துவத் துறையினரால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வரும் நிலையில், இம்மக்கள் வீடுகளுக்குச் செல்லும் பொழுது இடருதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கம் மேற்கொண்டு வருகிறது.

## கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை 50 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் 50 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டம் அதிகார சபையின் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண திட்டமிடலுக்கான பிரதிப் பிரதம செயலாளர், கிழக்கு மாகாண நிதிக்கான பிரதிப் பிரதமர் செயலாளர், கிழக்கு மாகாண கட்டிடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உட்பட சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வீடமைப்பு அதிகார சபையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் பல முக்கிய தீர்மானங்களும் எட்டடப்பட்டன.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் சேவைகளை ஜனரஞ்சகப்படுத்தி மிகப்பெரிய வருமானம் ஈட்டும் நிறுவனமாக மாற்றி அமைப்பதற்கான பல்வேறு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு ஏகமனதாக பணிப்பாளர் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## காரைதீவு, மாவடிப்பள்ளியில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி



(நூருல் ஹுதா உமர் )

கடும் காற்று மற்றும் மழை காரணமாக காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காரைதீவு - 08 மற்றும் மாவடிப்பள்ளி - மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பகுதியளவில் வீடு பாதிக்கப்பட்ட இரு பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்கான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனினால் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




## அறபா பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அறிமுக விழா



(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய பழைய மாணவர்கள்ஏற்பாடு செய்த அறபா பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அறிமுக விழா நேற்று நடைபெற்றது.

இதில் 21 பழைய மாணவ அணிகளின் சீருடை மேலங்கி அறிமுக விழாவும் சுற்றுத் தொடர் தொடர்பான வெற்றிக் கிண்ணம் அறிமுகமும் நேற்றிரவு அட்டாளைச்சேனை சக்கி மண்டபத்தில் இடம் பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பைஷால் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை, முன்னால் தவிசாளர் எம்.ஏ.அன்சில். ஸ்ரீ லங்க முஸ்லிம் காங்கிரஸின் 9ஆம் பிரிவு அமைப்பாளர் ஏ. சீ நியாஸ் மற்றும் பிரதேச செயலாளர்களான எஸ். எல் எம் ஹனீபா, எம்.ஏ.சீ ஷாபிர், பிர்னாஸ் இஸ்மாயில், சிறப்பித்து முன்னாள் மா நகர சபையின் பிரதி மேயர் எல்.எம். சபிஸ் உட்பட பல அதிகாரிகளும் அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என ஏராளமான பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இரண்டு வாரங்களுக்குள் பெரிய வெங்காயத்தின் விலை குறையும்!

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த 2 வாரங்களுக்குள் பெரிய வெங்காயத்திற்கான ஏற்றுமதி கட்டுப்பாடுகளை இந்தியா தளர்த்துவதன் மூலம் இலங்கையில் பெரிய வெங்காயத்தின் விலை குறையும் என வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக பிரிவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.


மேலும் அங்கு தகவல் தெரிவித்த அமைச்சர், பெரிய வெங்காய ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியதால், அதன் அழுத்தம் இலங்கையையும் பாதித்துள்ளது எனவும், இந்த வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்களின் வாழ்க்கைச் சுமை 75 வீதத்தால் குறையும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த வருடம் நுகர்வோர் அதிகார சபைக்கு புதிய வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து அதன் மூலம் நுகர்வோர் உரிமைகளை மேலும் உறுதிப்படுத்தும்



வகையில் செயற்படுவதற்கு எதிர்பார்ப்பதாகவும், பிறந்துள்ள 2024 ஆம் ஆண்டினை பொருளாதார வளர்ச்சியுடன் தொடங்க முடியும் எனவும் அமைச்சர் இங்கு மேலும் குறிப்பிட்டார். (ரெத-16)

# 23 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்க திட்டம்



இந்த வருடம் 23 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன் மூலம் 4.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட எதிர்பார்க்கப்படுவதாக மேற்படி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை எட்டுவதற்கு 11,000 குறைவாக காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சமீப காலங்களோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் வருடத்தில்தான் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் அதன்போது 33 லட்சத்து 750 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரெத-15)

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சாய்ந்தமருதில் பிரியாவிடை நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடந்த 27 வருடங்களாக சாய்ந்தமருது, கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய எம்.எம்.எம். முபாரக், சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்று சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு மாற்றலாகி செல்வதை அடுத்து அவருக்கான பிரியாவிடை நிகழ்வு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது எம்.எம்.எம். முபாரக்கின் சேவை நலன் பாராட்டி சமுர்த்தி வங்கிச் சங்க மற்றும் கணக்காய்வு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நினைவுப் பரிசு வழங்கி வைக்கப்பட்டது.






## மனித நுகர்விற்கு பொருத்தமில்லாத விற்பனைப் பொருட்கள் அழிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் முற்றுகையில் வீதியோர வியாபாரிகள் பலரின் மனித நுகர்விற்கு பொருத்தமில்லாத பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகர் மற்றும் கல்லடி பிரதேசங்களில் வீதியோர அங்காடி வியாபார நிலையங்களை பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனையிட்டுள்ளனர்.

இதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமில்லாத வாழைப்பழம், தோடம்பழம், கரட், இனிப்பு பண்டமான பூந்தி ஆகியவற்றை விற்பனை செய்த 7 வியாபாரிகளின் மேற்கூறிய பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணனின் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதே வேளை, கல்லடி பொதுச் சந்தைத் தொகுதி, கல்லடி, திருகோணமலை வீதி ஆகியவற்றிலும் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## திருமலை கொழும்புக்கிடையில் குளிரூட்டப்பட்ட புகையிரத சேவை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலையிலிருந்து கொழும்பு புறக்கோட்டைக்கான குளிட்டப்பட்ட புகையிரத சேவை இம் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

திருகோணமலைக்கும் கொழும்பு புறக்கோட்டைக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட புகையிரத சேவை இம் மாதம் 7 ஆம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக திருகோணமலை பிரதான புகையிரத நிலைய அதிபர் தி.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு புறக்கோட்டையிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு பயணிக்கும் இப்புகையிரதம், திருகோணமலையை முற்பகல் 11.45 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் மதியம் 12.35 மணிக்கு திருகோணமலையிலிருந்து பயணிக்கும் இப் புகையிரதம் பிற்பகல் 6.35 இக்கு கொழும்பு புறக்கோட்டையை வந்தடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358